Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள் 3

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6
வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

17 } சனிரோ, 16-9-1944 புரட்டாசி-மீ 1௨ { மலர் 49

பெரியார் ஈ. வெ. ரா.

சேலம் மாநாடுபற்றிய விளக்கம்

ன்னையில் 7-9-44லும் 8-9-44லும் றபெ வண்ணாரப்பேட்டை தன மி பள்ளி ஹாலிலும் கோக்கலே மண் த்திலும், 30-8-44ல் மாயவரத்திலும், 9-44ல் காரையிலும் தோழர்கள் பி. கந்தசாமி, டி. ஷண்முகம், கிடாசலம், டி. பி. ஆறுமுகம் வர்கள் தலைமையில் பெரியார் வெ. ரா. சேலம் மாநாட்டைப்பற்றிப் ய விளக்கவுரை:

ழர்களே,

சேலம் மாநாட்டைப்பற்றி பல இடங் லும் இங்கு வந்து சென்னை ம் இரண்டொரு கூட்டத்தில் கிப் பேசவேண்டுமென்று பல பர்கள் கேட்டுக்கொண்டார்கள். திரிகையில் வந்த சேதிகளைப் பார்த் லரும் சேலத்தில் என்ன நடந் என்பதை அறிய ஆசைப்படுவார்கள். த நாட்டில் பொதுவாழ்வில் நாண ம் யோக்கியப் பொறுப்போ அடி டு அற்றுப்போய் விட்டது. அயோக் களுக்கு மதிப்பு அதிகரித்து விட் . போக்கிரிகளைக் கண்டால் மக்கள் கமாக பயப்படுகிறார்கள். பத்திரி க்காரர்களுக்கு ஒரு வரமுறை இடை து. யோக்கியத்தன்மை அயோக்கியத் மை பார்த்து அவர்கள் நடந்து கொ தில்லை. அயோக்கியத்தனம் என்று கள் மனதார அறிந்த விஷயங்களுக் யோக்கியமான தன்மை என்று ந்த விஷயங்களுக்கும் வித்தியாசம் டுவதில்லை. தங்கள் அக்கறையுள்ள ல காரியங்களில் ஜாக்கிரதையாக ந்து கொள்ளுகிறார்கள். தங்களுக்கு யமானது என்று கருதுகிற விஷயத் பழி வாங்குகிற உணர்ச்சியோடு க்கியத்தனங்களை ஆதரிக்கிறார்

ரணமாக தோழர் பி. பாலசுப்பிர ிய முதலியார் என்பவர் சேலத்தில் டியேற்றும்போது நடந்து கொண்ட மும் பேசிய பேச்சும் எந்தப் பத்தி க்காரருக்குத் தெரியாது? அப்படி விருக்க அவர் வெளியில் வந்து நடந்து கொண்ட காரியத்திற்கும் அவர்களின் நண்பர்கள் நடத்தைக்கும் இவர்கள் ஆதர வளிக்கலாமா? மற்றவர்கள் விஷயத்தில் இவர்கள் இப்படியா நடந்து கொள்கி றார்கள்? ஆகவே சேலம் மாநாட்டைப் பற்றிப் பொது மக்கள் தவறாகக் கருதும்படியாக ஏற்பட்டதற்குக் காரணம் பத்திரிகைக்காரர்கள் செய்த கலாட்டா வே ஒழிய வேறில்லை. பார்ப்பனர் களின் ஆதிக்கமுள்ள பத்திரிகைகளிட மிருந்து இதைவிட வேறு என்ன அதுவும் நான் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? நாட்டில் இன்றுள்ள அரசியல் மத இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களும் அதன் தலைவர்களும் பத்திரிகைகளும் இந் நாட்டின் நாணயக் குறைவிற்கும் அயோக்கியர்களின் ஆக்கத்திற்கும் அதற்கு மாறாக யோக்கியர்களுக்கும், நல்ல காரியங்களுக்கும் ஏற்படும் தொல்லைகளுக்கும் முழுப் பொறுப் பாளிகளாவார்கள் என்றால் அதில் பெரிய தவறு இருக்காது. நமது சர்க்கா ருக்கும் இந்த நிலை அனுகூலமானதால் அவர்களும் இதை பயன்படுத்திக் கொள் கிறார்கள்.

சேலம் மாநாடுபற்றி குறைகூறவோ குற்றம் சொல்லவோ என்ன இடம் இருக் கிறது? பத்திரிகைகாரர்களுக்கு அவர்க ளுடைய ரிப்போர்ட்டர்களால் அங்கு நடந்த சேதி தெரியும். சர்க்காருக்கும் சி.ஐ.டி. ரிப்போர்ட்டர்களால் சங்கதி தெரியும், மற்றும் பல இடங்களிலிருந்தும் வந்த 30000, 40000 பிரதிநிதி காட்சியாளர் ஆகிய மக்களுக்கும் நேரில் சேதி தெரி யும். இப்படி இருக்க குறைகள் எப்படி பத்திரிகைகாரர்களால் விளம்பரப்படுத் தப்படுகிறது?

சேலம் மாநாடு சேலத்தில் நடத்த 1940ல் திருவாரூர் மாநாடு அனுமதி அளித்தது. 1943ல் சேலத்தில் நடந்த நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்தில் தோழர் கள் சேலம் சேர்மன் இரத்தினசாமி பிள்ளை, செட்டோ முதலியவர்கள் எழுந்து நின்று முறைப்படி அனுமதி கேட்டுப் பெற்றார்கள். அதன் பிறகு நடத்துவதாக முன்வந்து தங்களே முறை யே வரவேற்புக்கழகத் தலைவராகவும் காரியதரிசியாகவும் ஆகி பத்திரிகைகளு க்கு சேதி விட்டார்கள். பிறகு முயற்சி க், 6 மாதம் இல்லாமல் நிறுத்தி விட் டார்கள். இந்த மத்தியில் பொதுமக்கள் "சேலம் மாநாடு எப்போ, எப் போ" என்று என்னைக் கேட்ட வண் ணம் இருந்தார்கள். சில அயோக்கியர் கள் சேலம் மாநாட்டை நானே 'டிலே' செய்கிறேன் என்றும் காரணம் மாநாடு நடந்தால் என் தலைமைப்பதவி போய் விடும் என்று பயப்படுகிறேன் என்றும் பிரசாரம் செய்தார்கள். இவ்வயோக்கி யர்களுக்கு தலைமைப் பதவிக்குவர ஆசை கொண்டு, என் தலைமைப்பதவி யால் தங்கள் சுயநலம் கெடுமென்று கருதிய சில பெரிய, பெரிய மனிதர்கள் பணம் கொடுத்து ஊக்குவித்து 'என் னைப்பற்றி சதா வைது பிரசாரம் செய்யத் தூண்டி மகிழ்ந்து வந்தார்கள். இந்நிலை எனக்கு சலிப்பை உண் டாக்கி 'சேலத்தில் மாநாடு நடக்குமா இல்லையா, நடக்கப்போகிறீர்களா இல் லையா' என்று வரவேற்புக்கமிட்டித் தலைவரையும் காரியதரிசியையும் கண் டிப்பாய்க் கேட்கவேண்டியதாயிற்று. நான் சேலம் சென்று வரவேற்புத் தலை வரைக் கேட்ட போது நடத்துவதில் தனக்கு ஆட்சேபனையில்லை என்றும் யாரும் தன்னுடன் ஒத்துழைப்பதில்லை என்றும் சொன்னார். காரியதரிசி தோ ழர் செட்டோவைக் கண்டு தோழர் அண் ணாதுரை கேட்டதில் "கட்சி எங்கே இருக்கிறது? மாநாடு எதற்கு? எனக்கு கட்சியில் இருக்கப் பிரியமில்லை, நான் இராஜினாமா கொடுத்துவிடுவதாகச் சொல்லி விட்டேன். ஆகவே மாநாடு பற்றி எனக்குக் கவலை இல்லை என் னைக் கேட்காதீர்கள்" என்று சொல்லி விட்டார்.

இதன் மத்தியில் எனது நண்பர் தோழர் பாண்டியன் அவர்கள் மாநாட்டை மதுரையில் நடத்துகிறேன். உங்களுக்கு ஆட்சேபணை உண்டா என்று கேட்டார். ஆட்சேபணை இல்லை என்று சொல்லிவிட்டு

உடனே நான் சேலம் போய் தோழர்கள் கே. ஜெகதீசன், எம். ஆர். சித்தையன் ஆகியவர்களுடன் தோழர் இரத்தினசாமி அவர்களுடைய நிலம் இருக்குமிடம் சென்று "மாநாட்டை நீங்கள் நடத்த சவுகரியப்படாவிட்டால் மதுரைக்குக் கொடுத்துவிடலாம் அதற்காகவே வந்தோம்" என்றேன். தோழர் இரத்தினசாமி அவர்கள் இங்கேயே நடத்திவிடலாமென்றார். அதற்கு நான் மாநாட்டுக் காரியதரிசி செட்டோ இப்படிச்சொன்னாராம் என்றேன், அதைப்பற்றி கவலை இல்லை, அவர் இருப்பதும் போவதும் ஒன்றுதான் நடப்பதானால் தானாக வந்து கலந்து தன்னைக்காட்டிக் கொள்ளுவார் என்றார். அதன்மீது அங்குள்ள தோழர்களை ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டு ஊருக்குத்திரும்பி விட்டேன். பிறகு நான் மாநாடு சேலத்தில் நடக்கும் என்று பத்திரிகையில் போட்டுவிட்டேன். அப்புறம் சுமார் 10 நாள்வரை ஒன்றும் நடக்கவில்லை. மறுபடியும் சேலம் சென்றேன். ஒருவரும் முயற்சிக்கவில்லை என்று தெரிந்தேன். அங்குள்ள நண்பர்கள் சிலர் என்னைக் கண்டு 'நீங்கள் ஒரு தேதி குறிப்பிட்டு அன்று வரவேற்புக்கமிட்டி கூட்டம் போட்டு அன்று வருங்கள், யார்வந்தாலும் வராவிட்டாலும் நடத்திவிடலாம்" என்று உறுதிகூறி ஒரு தேதி சொன்னார்கள். அந்த தேதிப்படி வரவேற்புக் கமிட்டி கூட்டம் போட்டு நானும் அன்று சென்றேன். அக்கூட்டத்திற்குச் சென்று நூற்றுக்கணக்கான மக்கள் வந்து கூடியபிறகும் நான் 2மணி நேரம் காத்திருந்தும் தலைவரும் காரியதரிசிகளும் வரவில்லை. என்றாலும் மாநாடு நடத்துவதா விட்டு விடுவதா என்று அங்குள்ளவர்களைக் கேட்டேன், யார் வந்தாலும் வராவிட்டாலும் நாங்கள் நடத்தி விடுகிறோம், ரூ. 3000 இப்பொழுதே கொடுக்கிறோம் என்றார்கள். தோழர் கே. ஜகதீசன் அவர்கள் தலைமையில் நடவடிக்கையை ஆரம்பித்து 3 காரியதரிசிகளை அக்கூட்டத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்டது. பண பொறுப்புக்கு ஒருவர், காரிய நிருவாகம் பார்க்க ஒருவர், பிரதிநிதிகளைக் கவனித்து சவுகரியம் செய்து கொடுக்க ஒருவர் ஆகிய மூவர் நியமிக்கப்பட்டார்கள். இது தெரிந்த வரவேற்புத்தலைவரும் காரியதரிசிகளும் அன்று இரவு சுமார் 11 மணிக்கு நான் இருக்கும் இடத்திற்கு வந்து தாங்களே நடத்துவதாக ஒப்புக் கொண்டு விட்டார்கள். 'தலைவர் தாங்கள் தான் இருக்கவேண்டும்' என்று வரவேற்புத்தலைவர் என்னிடம் சொன்னார். நான் அது உங்கள் கமிட்டியின் இஷ்டம். அது தேர்தல் செய்து தெரிவிக்கவேண்டியதாகும் என்றேன். உடனே தோழர் செட்டோ அவர்கள் என் [illegible] தலைவராகப் போட்டால் ஜனங்கள் மாநாட்டில் கலகம் செய்வார்கள் போல் இருக்கிறது. உங்கள் பெயரைப் பிரேரேபித்த உடனே வேறு ஆள் பெயர் பிரேரேபிக்கப்பட்டு விடும், அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்' என்று கேட்டார். நான், "நீங்கள் படித்தவர்கள், எம். ஏ. பட்டம் பெற்றவர் அப்படி இருக்க இதைப்பற்றி என்னைக் கேட்கிறீர்களே, உங்களுக்குத் தெரியாதா அதையெல்லாம் என்னிடம் சொல்லுவதுகூட மரியாதை அல்ல ஆதலால் உங்களுக்கோ உங்கள் கமிட்டிக்கோ அல்லது பிரதிநிதிகளுக்கோ பிடித்தமான ஒரு தலைவரைப் போட்டு மாநாடு நடத்தவேண்டியதுதான் உங்கள் கடமையாகும்" என்று சொன்னேன், உடனே செட்டோ அவர்கள் 'எனக்கு கட்சியே பிடிக்கவில்லை' கட்சிக்கொள்கையும் பிடிக்கவில்லை; கட்சியில் இருக்கவும் பிடிக்கவில்லை' என்றார். கொள்கையில் என்ன உங்களுக்குப்பிடிக்காமல் போய்விட்டது? என்றேன். அதற்கு அவர் 'திராவிடநாடு கேட்பது எனக்குப் பிடிக்கவில்லை' என்றார். நான் நீங்கள்தானே திராவிடநாட்டு பிரிவினை மாநாட்டுக்கு தலைமைவகித்தீர்கள் என்றேன், அதற்கு செட்டோ அவர்கள் "பிறகு நீண்ட ஆலோசனை செய்ததில் அது தவறு என்று பட்டது" அதோடு 'நீங்களும் குமாரராஜாவும் ஒரு கிளிக் (Clique) ஆக இருந்துகொண்டு கட்சிக்காரியத்தையே கெடுத்துவிட்டீர்கள் அதனால் உங்கள் தலைமையும் பிடிக்கவில்லை. உங்களைத் தலைவராகப் போட்டால் கட்டாயம் மாநாட்டில் கலவரம்வரும்" என்றார். எனக்கு சிறிது மனவருத்தம் ஏற்பட்டது, ஆனால் கோப உணர்ச்சி போய் நான் "தோழர் செட்டோ, நீங்கள் படித்த மனிதர்போல் நடந்துகொள்ளவில்லை, தலைவரை தேர்ந்தெடுப்பது உங்கள் கடமை, உங்களுக்கு சரி என்று பட்ட யாரையும் தேர்ந்தெடுக்கலாம், அப்படி இருக்க என்னிடத்தில் இப்படி பேசுவது மரியாதை அல்ல. கலகம் ஏற்படக்கூடும் என்று தோன்றினால் கலகம் ஏற்படாதபடி ஒருவரைத் தெரிந்தெடுப்பது புத்திசாலித்தனம். இனிமேல் என்னிடம் இப்படி மரியாதைத் தவறாகப் பேசாதீர்கள். 'கிளிக்' என்று சொன்னதை வாபஸ் வாங்குங்கள்" என்றேன். பிறகு அவர் நான் அந்த அருத்தத்தில் சொல்லவில்லை, ஜனங்கள் அப்படிப் பேசிக்கொள்ளுகிறார்கள். குமாரராஜா கஸ்தூரிபாய் பண்டுக்கு பணம் கொடுத்தார். அவரை நீங்கள் ஏன் என்று கேட்கவில்லை என்றும் ஜனங்கள் பேசுகிறார்கள் என்றார். ஜனங்கள் உம்மைப்பற்றிப் பேசிக்கொள்ளுவதை யெல்லாம் உம்மிடம் சொன்னால் நீர் மன வருத்தப்படாமல் இருப்பீரா? குமாரராஜா பணம் கொடுத்தது உங்களுக்குத் தெரியுமா? குமாரராஜா அவர்கள் "கஸ்தூரிபாய் பண்டுக்கு ஒரு சின்னக் காசுகூட கொடுக்கவில்லை, நான் எதிலும் கமிட்டி மெம்பரும் அல்ல" என்று சொல்லிவிட்டார், பத்திரிகையைப் பார்த்து ஒருவர் மீது நடவடிக்கை எடுப்பதா? அப்படியானால் உங்கள் மீது நடவடிக்கை எடுக்க அதைவிட பலமான நேரில் தெரிந்த காரியம் இருக்கிறது? அது எடுக்காமல் இருப்பதற்காக என்னைக் குறை கூறுவதா என்றேன். அதற்கு செட்டோ "நாங்கள் என்ன தப்பு செய்தோம்" என்றார்.

"நீங்கள் ஆஜராய் இருந்து காரியம் நடத்தின ஒரு நிர்வாக சபைக் கூட்டத்தை—உங்கள் ஊரில் நடந்த ஒரு நிர்வாக சபைக் கூட்டத்தை அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல, சட்டப்படி நடந்ததல்ல; ஆரஞ்சிப்பழம், பிரியாணிபோட்டு நடந்த கூட்டம் என்று எழுதின ஒரு கட்சி மெம்பரை—சட்ட விரோதமாக ஒரு எதிர் ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டு கலகம் செய்கிற ஒரு மெம்பரை ஒழுங்குப்படி நடந்த காரியங்களையும் மாநாடுகளையும் இழிதன்மையாக் குறைகூறி மறுக்கும் ஒரு கட்சி மெம்பரின் நடத்தையை நீங்கள் அது அயோக்கியத்தனம் என்று மனதாரத் தெரிந்திருந்தும் அப்படிப்பட்ட மனிதனுக்கு பணம் வரவேற்பு செய்து வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுத்து ஆதரித்தால் இதைவிட கேவலமான கட்சிக்கு கேடானதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியதுமாகவது ஒரு பத்திரிகை சங்கதி ஆகிவிடும்? கஸ்தூரிபாய் பண்டுக்கு பணம் கொடுத்ததாக பத்திரிகைக்காரரின் தப்பான செய்கையைக் கண்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்காததால்தான் 'கிளிக்'கில் சேர்ந்தவனாக ஆகிவிடுவேனா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் நீங்கள் சொல்வது சரி வரவேற்பு கொடுத்தவர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதுதான் என்றார். உடனே சேர்மென் இரத்தினம்பிள்ளை அவர்கள் "இதெல்லாம் எனக்குத் தெரியாது இவர்கள் சொன்னார்கள் அவருக்குப் பத்திரம் வாசித்தால் கவர்னர் மதிப்பார் ஒரு தமிழனுக்கு மரியாதை காட்டுமே என்று என்னை சிலபேர் கேட்டார்கள், நான் சரி என்றேன்" என்றார். உடனே தோழர் கணேச சங்கரன் அவர்கள் "நானும் அந்த மனிதனுக்கு வரவேற்புக் கொடுக்க சம்மதிக்கவில்லை, இராஜகோபாலாச்சாரியுடன் வாதிட்டு ஜெயித்தாரே அந்த வெற்றிக்கு என்று என்னை சிலர் கேட்டார்கள். அதற்கு நான் சம்மதித்தேன், இதெல்லாம் எனக்குத் தெரியாது" என்றார். தோழர் கிருஷ்ணசாமி செட்டியார் நாளைக்கு வேண்டுமானாலும் நிறுத்திவிடலாம் என்றார். நான் உடனே

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் மாநாடு

தஞ்சையில் இம்மாதம் 26-ந்தேதி செவ்வாய்க்கிழமை புத்தூலகச் சிற்பி, புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அவ்வமயம் தன்மானக் கூட்டு நீதிக்கட்சித் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா, அரசியல்ஞானி சி. என். அண்ணாதுரை எம். ஏ., மாஜி மந்திரி எஸ். ராமனாதன், தோழர்கள் சி. பி. சின்னராசு, என். அர்ச்சுனன், இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்சு), சென்னை குஞ்சிதம் குருசாமி பி. ஏ. எல். டி., கே. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்), குடந்தை என். தவமணி ராசன், கே. கே. நீலமேகம், நெடும்பலம் என். ஆர். எஸ். ராமலிங்கம் பி. ஏ., விருதுநகர் ஆசைத்தம்பி, சேலம் கல்லூரித் தலைவர் எ. ராமசாமி கவுண்டர் எம். ஏ., எல். டி., திருப்பூர் என். ஆர். சுப்ரமணியம், எஸ். கருணானந்தம், ஜனார்த்தனம் பி. ஏ., கரந்தை பெரியசாமிப் புலவர் முதலியோர்கள் கலந்துகொள்வார்கள்.

இந்த மாநாடு வெற்றிகரமாக நடந்தேற ஆக்கத்துடன் ஊக்கமளிக்கவேண்டுகிறோம்.

குறிப்பு:— 26—9—44ந் தேதி செவ்வாய்க்கிழமை மாநாடு கண்டிப்பாய் நடைபெறும் எனத் தோழர் டி. கே. எஸ். பாலன், காரியதரிசி எழுதுகிறார்.

திருமணங்கள்

பெங்களூர்: தோழர் சி. பூங்காவனம் புதல்வன் தோழர் பூ. ரங்கநாதனுக்கும், தோழர் ஆர். லட்சுமணன் புதல்வி தோழர் ஜெகதம்மாளுக்கும் 17-9-44-ஆந் தேதி மாலை 4 மணிக்கு தங்கவயல் தோழர் ஜி. அப்பாதுரையார் தலைமையில் திருமணம் நடைபெறும்.

* *

சென்னை: விக்லியாக்கத்தில் 17-9-44 காலை 8-30 மணிக்கு தோழர் எஸ். ஜீ. குஞ்சிதம் அம்மையார் பி. ஏ., எல். டி., தலைமையில், தோழர்கள் கே. வி. வைத்தியநாதன் அவர்கட்கும் பூங்காவனம் அம்மையாருக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெறும்

கரூர் திராவிடர் மாநாடு
24-9-44 தேதி ஞாயிற்றுக்கிழமை
கரூர் அம்பிகை டாக்கீசில் நடைபெறும்

தலைவர்: C. N. அண்ணாதுரை M. A.
திறப்பாளர்: N. அர்ச்சுனன் (இழபருமார பட்டக்காரர்)
கொடி உயர்த்துபவர்: இரா. நெடுஞ்செழியன் B. A. (Hons)
திராவிடநாட்டு படத்திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ராமசாமி.
பெரியார் படம்: க. அன்பழகன் B. A (Hons)
பாரதிதாசன் படம்: ப. ஜனார்த்தனம் B. A.,
ஈ. வெ. ரா. நாகம்மையார் படம்: சரசுவதி கண்ணப்பர் (பாரதிதாசன் திருமகளார்)
பன்னீர்செல்வம் படம்: S. R. சுப்பிரமணியம்
மற்றும் பல தலைவர்களும் கலந்து கொள்வார்கள்.
அன்று மாலை அமராவதி ஆற்றங்கரையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

குறிப்பு: சேலம் மாநாடு (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டுத் தீர்மானங்களுக்கும் சுயமரியாதை இயக்கக்கொள்கைகளுக்கும் அதிக வித்தியாசமில்லாதிருப்பதாலும், சேலம் மாநாட்டுக்குப்பின் அடுத்தபடியாக நடக்க விருக்கும் மாநாடு 24-9-44 தேதி கரூரில் நடைபெற இருக்கும் கரூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மாநாடாயிருப்பதாலும் அம் மாநாட்டை "திராவிடர் (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு" என்ற பெயராலே நடத்த முடிவு செய்திருக்கிறோம்.

செயலாளர்கள்:
P. K. ஐயா,
வி. க. புலிகேசி.

வரவேற்புக்கழகத் தலைவர்:
S. A. மயில்.

திருச்சியில் 17-9-44 ஞாயிறு பெரியார் பிறந்த நாள் விழாவும் பெரியாருக்குப் பாராட்டும்.

இடம்: திருச்சி பழக்கடை (Coronation) தோட்டம்.

நிகழ்ச்சி நிரல்

இரவு 8-15 உணவு
9-15 வாழ்த்திதழ்படித்தளித்தல்
9-30 பெரியார் பேச்சு 'திராவிட இளைஞர்களும் சமூகத் தொண்டும்.'
10-15 தமிழ் இசை

தி. பொ. வேதாசலம்,
அழைப்பாளர்.

நெல்லை ஜில்லா ஆதிதிராவிடர் மாநாடு

கோவில்பட்டியில் நடக்கவிருக்கும் ஷை ஜில்லா ஆதிதிராவிட 17-வது மாநாட்டையொட்டி தோழர் ஜான் தாமஸ் தலைமையில் பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்டு பல கிராமங்களில் பிரசாரம்செய்து வருகின்றனர்.

* *

3-9-44 ஆந் தேதி இரவு 9-மணிக்கு தோழர் ஈ. எம். டி. முத்தையாவுக்கும் தோழர் மா. முத்தம்மா

இராசிபுரம், நாமக்கல் தாலூகா விவசாயிகள் மாநாடு

28-9-44 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இராசிபுரம் ஓரியண்டல் தியேட்டரில் நடைபெறும்.

மாஜிமந்திரி கனம் ஆர். எம். பாலாட் எம். ஏ., பார்-அட்-லா எம். எல். சி., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் பெரியார் ஈ. வெ. ரா., பழயகோட்டை என். அர்ச்சுனன், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, டாக்டர் பி. என். மூஞ்சே, கல்கத்தா டாக்டர் ஷியாம் பிரசாத் முக்கர்ஜி, கே. எ. பி. விசுவநாதம், அ. பொன்னம்பலனார், ஜி. டி. நாயுடு, ஜே. என். கண்ணப்பர், எஸ். தர்மலிங்க முதலியார் முதலிய அநேக பிரபல தலைவர்களும் மாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

இப்படிக்கு,
G. P. சோமசுந்தரம்,
வரவேற்புக் கமிட்டி தலைவர்.

ளுக்கும் மகாஜன சங்கத்தின் ஆதரவில் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது.

திருவண்ணாமலை தமிழர் திருமணம்

31-8-44 வியாழக்கிழமை காலை 10-மணிக்கு திருவண்ணாமலை பிரபல ஜவுளி வியாபாரியும், நமது நண்பரும் தெ. இ. க. உ. சங்கத்தின் தனாதிகாரியுமான தோழர் பாலகிருஷ்ண முதலியார் அவர்களின் மகன் தோழர் வையாபுரிக்கும், ஜாகீர் ஆரணி தாண்டவராய முதலியார் மகள் தோழர் வி. உத்தராயணி அம்மாளுக்கும் தமிழர் முறைப்படி திருமணம் திருவண்ணாமலை தென்இந்திய கலவுரிமைச் சங்கக்காரியதரிசி தோழர் ஆர். எஸ். நடேசமுதலியார் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது. தோழர்கள் ஏ. நாராயணசாமி முதலியார், கேப்டன் டாக்டர் எஸ். சந்திரமதி நாதன், போளூர் ரே. சுப்பிரமணியம் முதலானவர்களால் திருமணம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றப்பட்டது. மணமக்களுக்கு வாழ்த்துப்பாக்கள் வாசித்தளிக்கப்பட்டன.

தோல்பதனிடும் தொழிலாளர் சங்கம்

வாணியம்பாடி: கடந்த இரண்டு மாதங்களாக கூலி உயர்வுக்காக வட ஆற்காடு ஜில்லா தோல்பதனிடும் தொழிலாளர் சங்கத்தார் செய்து வந்த முயற்சியின் காரணமாக சென்ற 4-9-44 தேதி சங்கக்காரியதரிசிகளை ஸ்தல டிபுடி கலெக்டரும் மற்ற அதிகாரிகளும் அழைத்து கூலி உயர்வு தர முடியாதென்றும் பஞ்சப்படி ரூபாய் 4க்கு பதிலாக 6½ கொடுக்க ஏற்பாடு செய்வதாகச் சொல்ல, அவர்கள் இதற்கு இணங்க மறுத்துவிட்டார்கள். கூலி 8 அணாவாக உயர்த்தவேண்டுமென்றும் பஞ்சப்படி 2-8-0 அதிகமாகத் தருவதாகக்கூறுவது திருப்தியளிக்கக்கூடியதாயில்லையென்றும் ஜில்லா கலெக்டருக்கு 5-9-44ல் தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

* *

தாராவி: (பம்பாய்)27-8-44ல் தோழர் என். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்ற "தமிழ்நாடு பகுத்தறிவு நிலைய"த்தின் 8-வது மாதாந்திரக் கூட்டத்தில் எஸ். சிவன், டி. சுப்பையா ஆகியவர்களை புதிய அங்கத்தினராக பதிவுசெய்யப்பட்டது. 17-9-44ந்தேதி பெரியார் பிறந்ததினம் கொண்டாடவும் இயக்க விளம்பர சம்பந்தமாகவும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

கொழும்பு: 20-8-44ல் தோழர் டேவிட் ஜோசப் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருச்செந்தூர் தாலுகா ஆதிதிராவிட லீக்கை இலங்கையின் நடத்த நெல்லை ஜில்லா ஆதிதிராவிட லீக்கை கேட்டுக்கொள்ளப்பட்டது.

* *

“ஜஸ்டிசைட்”

‘ஜஸ்டிசைட்’ என்கிற ஆங்கில வாரப்பத்திரிகை கூடிய விரைவில் ஈரோட்டிலிருந்து வெளிவரும்.

மானேஜர்

பெரியார் பிறந்தநாள் கொண்டாட்டம்

நாமகிரிப்பேட்டை: இராசிபுரம் தாலுகா நாமகிரிப்பேட்டையில் 20-9-44-ல் பெரியார் அவர்களின் 66-வது பிறந்த நாள் கொண்டாடப்படும். அன்று மாலை ஊர்வலத்திற்குப் பின் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பாவலர் பாலசுந்தரமும், சி. பி. சின்னராசுவும், சுந்தராப்பூர் ஒய். எஸ். அருணாசலமும் கலந்து கொள்வார்கள்.

* *

ஈரோடு: 17-9-44-ஆம் தேதி ஈரோடு மருத்துவர்களின் சார்பாக நடைபெறும் அமாவாசைக் கூட்டத்தில் பெரியார் பிறந்த நாள் கொண்டாடப்படும்

கஸ்தூரிபாய் பண்டு

கஸ்தூரிபாய் பண்டுக்கு தோழர்கள் குமாரராஜா முத்தைய செட்டியார் அவர்களும், பி. ராமச்சந்திர ரெட்டியார் அவர்களும் பொருளுதவி செய்யவில்லையென்றும், அதன் கமிட்டியில் அங்கத்தினராகவும் இருக்க சம்மதிக்கவில்லை என்றும் தெரிவிக்கிறார்கள்.

சீர்திருத்தத் திருமணம்

நாகபட்டணம் வடக்குத் துரோபதை அம்மன் கோவில் தெருவில் தோழர் பெ. ஆண்டித் தேவர் அவர்கள் புதல்வன் தோழர் அய்யாவு அவர்களுக்கும், தோழர் கருத்தம்மாளுக்கும், தோழர் எஸ். பி. கிருஷ்ணன் தலைமையில் 4-9-44-ல் சீர்திருத்தத் திருமணம் விமரிசையாய் நடைபெற்றது. தோழர்கள் பாவலர் பாலசுந்தரம், டி. என். ராமச்சந்திரன் முதலியவர்கள் சீர்திருத்தத் திருமணம் என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள். நாகை சுயமரியாதை சங்கத்தாரால் மணமக்களுக்கு சரிகை மாலைகள் அணிவிக்கப்பட்டது.

நமது சங்கங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் முறையே ரூபாய் ஒன்று வீதம் நன்கொடை அளிக்கப்பட்டது.

என்ன செய்கிறீர்கள்?

தோழர்களே! திருப்பத்தூர் (ராமநாதபுரம்) தோழர்கள் இரண்டு தினங்களில் நம் கழகத்துக்கு 100 உறுப்பினர்களை சேர்த்துவிட்டார்களாம். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

திராவிடர் கழகம்,
(ஜஸ்டிஸ் கட்சி) மத்திய நிலையம்,
ஈரோடு.

2-வது தமிழர் திருமண மாநாடு

செயலாளர், தமிழர் நல்வாழ்க்கைக் கழகம், சென்னை, எழுதுவது:

இக்கழக ஆதரவில் செப்டம்பர் திங்களில் காஞ்சியில் நடைபெறுவதாயிருந்த இரண்டாவது தமிழர் திருமண மாநாடு அடுத்த திங்களில் காஞ்சியில் கூடும். இக்கழகத் தலைவர் காஞ்சியில் வரவேற்பு உறுப்பினர்களைச் சேர்த்து வருகிறார். வரவேற்புக் கழகக் கூட்டம் காஞ்சியில் விரைவில் கூடி வரவேற்புக் கழகத் தலைவர், மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், செயலாளர், பொருளாளர், விளம்பரச் செயலாளர் முதலியவர்களைத் தெரிந்தெடுத்த பின்னர் தமிழர் மணமுறை ஒன்றை வகுத்து நூல் வடிவில் வெளியிட்டு மாநாட்டில் குறைந்த விலைக்கு கிடைக்க முயலும்.

இக்கழகம் நிறுவிய இந்து சட்ட சீர்திருத்த உட்கழகம் விரைவில் கூடி ராவ் உட்கழகம் தயாரித்த இந்து சட்டத்தை உருவி பார்த்து இதன் முடிவை இக்கழகம் கூட்ட இருக்கும் பொதுக் கூட்டத்தில் அறிவித்தும் ராவ் கழகம் சென்னைக்கு வரும்போது அவர்களிடம் தூது செல்ல ஒரு தூது குழாம் ஒன்று நிறுவுவதைப் பற்றி யோசிக்கும்.

திராவிடஸ்தானுக்கு காங்கரஸ்காரர்கள் ஆதரவு

திருப்பத்தூர், செப். 6—

விருதுநகரில் 9-9-44-ல் கூடவிருக்கும் இராமநாதபுரம் ஜில்லா காங்கரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு ஷை கமிட்டிக் காரியதரிசி தோழர் கா. கிருஷ்ணசாமி நாயுடு, அவர்கள் திராவிடஸ்தான் பிரச்சினையின் இன்றியமையாமையைப் பற்றி யோசிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் அனுப்பியுள்ளார் எனத் தெரிகிறது.

மதுரை திராவிடர் தொண்டர் படை

மதுரை: 10-9-44-ந் தேதி தோழர் சி. முத்திருளாண்டி தலைமையில் நடந்த மதுரை திராவிடர் தொண்டர் படைக் கூட்டத்தில் பெரியார் தலைமைப் பதவியில் நம்பிக்கையிருப்பதாயும், சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும், மதுரை தெ. இ. ந. உ. சங்கத்தை 'திராவிடர் கழகம்' என்று மாற்றும்படி சங்க நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

குளித்தலை மகாநாடு ஒத்திவைப்பு

17-9-44ல் தோழர் க. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடக்க இருந்த ஜில்லா மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மறைவு

கோவில்பட்டி: தோழர் எஸ். எம். செல்லையா அவர்களின் 3-வது குழந்தை நீலாவதி 7-9-44ல் இயற்கை எய்தியதைக் குறித்து வருந்துகிறேன். (ந. வி.)

டாக்டர் நடேச முதலியார் படத்திறப்பு

சென்னை: காலஞ்சென்ற டாக்டர் சி. நடேச முதலியார் அவர்களின் படத்தை ரிப்பன் கட்டிட (கார்ப்பரேஷன்)த்தில் சர். பி. டி. ராஜன் அவர்கள் 4-9-44ஆந் தேதி திறந்துவைத்தார். சென்னை கார்ப்பரேஷனுக்கு மைலாப்பூர் குமாரசாமியார் கழகத்தாரால் அளிக்கப்பட்ட டாக்டர் நடேச முதலியார் படத்தை திறந்துவைக்குமாறு சர் பி. டி. ராஜன் அவர்களைக் கேட்டுக்கொள்ளும் போது, மேற்படி கழகத்தலைவர் தோழர் எஸ். முத்தையா முதலியார் அவர்கள், காலஞ் சென்ற டாக்டர் நடேச முதலியாரின் சேவையைப் பாராட்டியதுடன் அவர் கார்ப்பரேஷனுடன் 20 வருடங்களுக்கு மேலாகவே தொடர்பு வைத்திருந்தார் என்றும், மக்களின் நன்மையே பெரிதாகக் கருதி அதற்காக அல்லும்பகலும் உழைத்த உத்தமரின் படத்தை கார்ப்பரேஷனில் திறந்துவைப்பது மிகவும் பொருத்தமானதென்றும், அவர் மக்களுக்காகவே உயிர்வாழ்ந்தார் என்றும், அவரைப் போல் இன்று எல்லோரும் இருந்தால், இன்றுள்ள பிரச்சினைகள் யாவும் சலபமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்றும் குறிப்பிட்டார்.

தோழர் டி. செங்கல்வராயனும், டாக்டர் நடேச முதலியாரைப் பாராட்டினார். நகரசபை சார்பாக மேயர் டாக்டர் நியமதுல்லா படத்தை ஏற்றுக் கொண்டார்.

தஞ்சை தினசரி நிருபரின் தகடுதத்தம்

நடந்த 7-9-44-ல் தஞ்சையில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்கூட்டத்தில் காந்தி-ஜின்னா சந்திப்பு என்பதைப் பற்றி மணலி கந்தசாமியும், தோழர் பாலதண்டாயுதமும் பேசினார்கள். தஞ்சை திராவிட கழக வாலிபர்களும் தஞ்சை சுயமரியாதைச்சங்க வாலிபர்களும் சேர்ந்து சுமார் 150பேர் திராவிடநாட்டு பிரிவினையும் பெரியார் சந்திப்பும் அவசியமா என்று கேள்வித்தாள் கொடுக்கப்பட்டது. கேள்விக்குப் பதில் சொல்லாமல் பாலதண்டாயுதம் பேசி முடித்தார் உடனே கேள்விக்குப் பதில் என்று கூச்சல் கிளம்பவே தோழர் வி. பூவராகவய்யங்கார் எழுந்து தான் சொல்லுகிறதாக திராவிடநாடு பிரிவினையும் பெரியார் சந்திப்பும் அவசியம் என்றார். நம் தோழர்கள் பெரியார் வாழ்க-திராவிடநாடு திராவிடருக்கு என்று கோஷித்துக் கொண்டு கலைந்துவிட்டார்கள். அதை சுயமரியாதைக்காரர்கள் பெரியார் ஒழிக என்று கத்திக்கொண்டு சென்றதாக மன்றத்திற் பொய்யை எழுதியிருக்கிறார். குழப்பங்கள் யாவும் வீழ்ச்சி அடைக.

இரண்டாம் போர்முனை!
மூன்றும் போர்முனை!!
நான்காம் போர்முனை!!!
ஐந்தாம் போர்முனை!!!!

★

இவைகளுக்கெல்லாம்
போதிய உதவிகள் வேண்டும்

ஆகவே
இன்னும் அதிகமான
பணம் தேவை

★

மே. த. கவர்னரின்
யுத்த நிதிக்கு
தாராளமாக பணம் கொடுங்கள்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

1944-ளு செப்டம்பர்-மீ 16-உ

ஜின்னா-காந்தி பேச்சு

ஜின்னா-காந்தி பேச்சு என்பது இன்று உலக கவனத்தை இழுத்திருப்பதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படுகின்றன. இந்தியாவில் பெரும்பான்மையான அரசியல் உணர்ச்சி உள்ள மக்களின் கவனத்தை இழுத்துக்கொண்டிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. அதில் (ஜின்னா காந்தி பேச்சில்) அதிசயமோ கருத்தோ ஒன்றும் இல்லாவிட்டாலும் பத்திரிகைகாரர்கள் செய்யும் விளம்பரங்களால் பாமரமக்கள் அரசியல் ஞானமில்லாத மக்கள் ஆகியவர்கள் கவனம் இழுக்கப்படுவதில் ஆச்சரியப்பட நியாயமில்லை.

இன்று ஜின்னா-காந்தி பேச்சு ஏற்பட அவசியமென்ன என்று பார்த்தால் இவர்கள் இருவர் பிரதிநிதித்துவ உரிமையும் இவர்கள் இருவரின் பெருமையும் குறைவுபட ஆரம்பித்ததின் பலனேயாகும். காந்தியாரின் தலைமையும் காங்கரசின் பெருமையும் காசவேலைக்கப்புறம் தேய ஆரம்பித்தது யாவரும் அறிந்ததேயாகும். அத்துடன் காந்தியார் காவலிலிருந்து விடுபட பட்டினி விரதம் முதலிய காரியங்கள் செய்ததின் பயனாய் வெள்ளையர்களுக்குள்ளும் காந்தியாருக்கு மதிப்பு போகவேண்டியதாகிவிட்டது. மற்றும் காந்தியாரின்,

“பிரிட்டனே வெளியே போ” என்கின்ற வீராப்புச் சொல்லும், யுத்தம்ஜெர்மனிக்கும்ஜப்பானுக்கும் தோல்வி அளித்து பிரிட்டனுக்கு வெற்றி அளிக்கும் நிலை ஏற்பட்டவுடன் “பிரிட்டனே எங்களைக் காப்பாற்று” என்கின்ற முகாரி பஜனைக்கு வந்துவிட்டது. மற்றும் காங்கரசின் வீராப்பின் பயனாய் வடநாட்டு முதலாளிகளுக்கு சண்டையின் மூலமாய் ஏற்பட்டிருக்கவேண்டிய இலாபம் பெரும்பாகம் குறைந்து அது பல பக்கம் சிதறிப்போய் விட்டதால், சண்டைக்குப் பிறகாவது தங்களுக்கு பெரும்பான்மையான இலாபம் கிடைக்க எப்படியாவது சர்க்காரைத் தஞ்சமடைய வேண்டும் என்கின்ற கவலை ஏற்பட்டு அந்த முதலாளிகளுக்குக் காந்தியாரிடம் இருக்கும் பற்றுதல் குறைய ஆரம்பித்து விட்டது. காந்தியாரின் மூளையான தோழர் இராஜகோபாலாச்சாரியார் காந்தியாரோடு பிணங்கி பொங்கி எழுந்து காந்தியாருக்கு விரோதமாய் பிரசாரம் செய்யக் கிளம்பி மக்களுக்கும் சர்க்காருக்கும் முஸ்லீம்களுக்கும் நல்ல பிள்ளை ஆக முனைந்து வெற்றிபெற ஆரம்பித்து விட்டார். இது இப்படியே இன்னம் ஒரு வருஷம் நடக்குமானால் “காந்தியாருக்கு ஒரு காலத்தில் மகாத்மா பட்டம் இருந்தது” என்ற வாக்கியம் பாடப் புத்தகங்களிலும் சோம்பேறிப் பேச்சுகளிலும் காணப்படவேண்டிய நிலை வந்துவிடும் என்கின்ற நிலை ஏற்பட்டு விட்டது. கடைசியாக சண்டையின் வெற்றியின் போதையில் சர்க்கார், காந்தியாருக்கு கன்னத்தில் அடித்தது போல் பளீர் பளீர் என்று பதில் சொல்லி அலட்சியப்படுத்தத் துணிந்து விட்டார்கள். இந்த நிலையில் காந்தியார் செய்ய வேண்டிய வேலை என்ன என்று பார்த்தால் ஜின்னா வீட்டுக்குப் போவதன் மூலம் தம்மை விளம்பரப்படுத்தி மக்கள் கவனத்தைத் தன்னைப்பற்றி நினைக்கும்படி செய்து கொள்ளுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? என்று கேட்கிறோம்.

அதுபோலவே ஜின்னா சாயபு நிலைமையும் சர்க்கார் அலட்சியம் ஒரு பக்கம் இருந்தாலும் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது என்பது அவருக்கு மிகுந்த கஷ்டமாய் விட்டது. படித்த முஸ்லிம்கள் லீக்கில் இருந்தும் பல் கும்பலாக விலக ஆரம்பித்துவிட்டார்கள். வேறு பல காரியங்களிலும், நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்ச்சி பலப்பட ஆரம்பித்து விட்டது. லீக்கு போலவே முஸ்லிம்களில் வேறு ஸ்தாபனங்கள் ஏற்படவும் அதைசர்க்கார்மதிக்கவும்ஆனநிலை ஏற்பட்டு விட்டது. ஜின்னா அவர்கள் யுத்த நடுநிலைத் தன்மை, சிறிதும் சர்க்காரால் லட்சியப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லாமல் போய்விட்டது.

ஜின்னா அவர்களின் பாகிஸ்தானைப் பற்றி கவலை இல்லாமலும், காந்தியாரின் “பிரிட்டனே வெளியே போ” கூச்சலைப் பற்றி கவலையில்லாமலும் சர்க்கார் தங்கள் காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பொது மக்களும் இவர்களை லட்சியம் செய்யாமல் சர்க்காருக்குத் தொண்டாற்ற போட்டி போட முனைந்து விட்டார்கள். இவைகளையெல்லாம் பார்த்து ஜின்னாசாயபுவேறு தலைவரை லீக்குக்கு ஏற்படுத்துவதற்கு முன் காந்தியாரை வரவேற்பதின் மூலம் தம்மை முன்பு வைதவர்கள் எல்லாம் புகழ்ந்து விளம்பரம் செய்ய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதை ஏன் விட்டுவிடவேண்டும் என்று கருதி வரவேற்று சமாதானப் பேச்சு என்னும் சாக்கில் இருவரும் விளம்பரங்களை அனுமதிக்க வேண்டியதாக ஆகிவிட்டது என்பதல்லாமல் வேறு காரணம் ஏதும் இவர்கள் சந்திப்பில் இருப்பதாக நாம் கருதவில்லை.

மற்றும் இன்று ஜின்னா சாயபு காந்தியாருடன் காந்தியாரை யாருடைய எதனுடைய பிரதிநிதி என்று கருதிப் பேசுகிறார் என்பது யாருக்கும் விளங்காத காரியமாகவே இருக்கிறது என்பதை முன்னமேயே கூறியிருக்கிறோம்.

அன்றியும் இதற்கு முன் ஒரு தடவை ஜின்னா சாயபிடம் காந்தியார் பேசவேண்டும் என்ற காலத்தில் “என்னை முஸ்லீம் பிரதிநிதியாய் ஏற்றுக்கொண்டு நீங்கள் இந்துக்கள் பிரதிநிதியாய் எம்மிடம் பேசுவதானால் பேசலாம்” என்று சொன்னது யாவருக்கும் ஞாபகம் இருக்கும். ஆனால் காந்தியார் இந்துக்களுக்கு பிரதிநிதி அல்ல என்பதோடு வேறு யாருக்குப் பிரதிநிதி என்பதும் தெரியவில்லை. ஆனால் காந்தியாரைப் பின்பற்ற ஆள் இருக்கிறது, செலவுக்குப் பணம் கொடுக்க ஆள் இருக்கிறது; ஆளும் பணமும் இருப்பதால் அவர் “பெரியவர்” என்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் அந்த பெரியவர் உரிமை ஜின்னா

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சாயபு குறிக்கொண்டு இருக்கும் பேச்சுக்கு பயன்படுமோ என்பது யோசிக்கத்தக்கதாகும். இது ஜின்னா சாயபுக்குத் தெரியாததாக இருக்கவும் முடியாது.

ஆகவே ஜின்னா காந்தி பேச்சு இவர்கள் இருவருடைய சண்டை ராஜியாகவும், இவர்கள் இருவர்களும் ஒருவருக்கொருவர் வைதுக் கொண்டதை நாட்டு மக்கள் மறந்துவிடவும் இரண்டு கட்சிப் பத்திரிகைகளும் அவ்வக்கட்சியின் எதிர்த்தலைவர்களை வைவதை மாற்றிக் கொள்ளவும் நாட்டுப் பாமர மக்களுக்கு "நமக்குள் கட்சியில்லை. சர்க்கார்தான் சுயராஜ்யம் கொடுக்கமாட்டேனென்கிறார்கள்" என்று காங்கரஸ் பிரசாரத்துக்கு ஒரு புது பிரச்சினை உண்டாக்கிக் கொள்ளவும் தான் பயன் படுமே ஒழிய வேறு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை என்பது உறுதி.

எனவே காந்தி ஜின்னா பேச்சு என்பது அவர்கள் இருவரின் சொந்த சங்கதியே ஒழிய பொது மக்கள் சங்கதி என்பதற்கு அவர்களிடம் ஒன்றும் கிடையாது என்போம்.

பாகிஸ்தான் ஏற்பட்டாலும் பாகிஸ்தான் பிரதேச முஸ்லிம்களுக்குத்தான் பலனே தவிர மற்றப் பிரதேச முஸ்லிம் மக்களுக்குத்தான் ஆகட்டும் என்ன பலன் என்பது மற்ற முஸ்லிம்கள் அறியாததல்ல. காந்தியார் தேசிய சர்க்கார் ஏற்பட்டாலும் காந்தியார் கேங்கிற்கு (Gang) த்தான் இலாபமே தவிர மற்ற மக்களுக்கு லாபம் என்ன என்பது மற்ற மக்கள் அறியாததல்ல.

ஆகவே இவர்கள் பேச்சில் முதலாவதாக, ஆகப்போகிற காரியம் ஒன்றும் இருக்க முடியாது என்போம்.

அப்படி ஏதாவது இருந்தால் குறிப்பிட்ட சிலருக்கு ஏதாவது நலன் இருக்கலாமே ஒழிய மற்றபடி பொதுவான நலன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை என்று உறுதியாகக் கூறுவோம்.

உப்பு சத்தியாக்கிரகம், யுத்த எதிர்ப்புக்கிளர்ச்சி, நாசவேலைமுதலியவைகளைப்போல் இதுவும் ஒரு எட்டுமாளைக்குக்கிளர்ச்சிசெய்யப் பயன்படுவதற்கு உதவி அளிக்கக் கூடியதென்பதல்லாமல் இன்றய

சேலம் மாநாடு

எங்கே ? ? ? பார்க்கலாம்.

சேலம் மாநாடு நடந்து இன்றைக்கு 20 நாள் முடிந்து 21வது நாள். தீர்மானங்களை ஏகமனதாய் நிறைவேற்றினீர்கள். இதுவரை நீங்கள் செய்த வேலை என்ன? 9 பை கார்டுகள் வாங்கி அதில் நீங்கள்,

"திராவிடர் கழகத்தில் அதன் கொள்கைகள், திட்டங்கள், சேலம் மாநாட்டு தீர்மானங்கள் ஆகியவைகளுக்குக் கட்டுப்பட்டு அங்கத்தினராகச் சேர சம்மதிக்கிறேன்" என்று எழுதி விலாசத்துடன் உங்கள் கையெழுத்தைப் போட்டு திராவிடர் கழக தலைமை காரியாலயம் ஈரோடு என்ற விலாசத்துக்கு தபால் பெட்டியில் போடுங்கள். இதுவே கிராமத்தில் இருக்கிறவர்கள் செய்ய வேண்டிய வேலை.

மெம்பர்கள் சேர்க்க ஆளில்லாத இடத்தில் உள்ளவர்கள் செய்ய வேண்டிய முதல் வேலையும் இதுவேயாகும். இதைச் செய்து விட்டு ரசீது புத்தகத்திற்கு எழுதுங்கள். தமிழ்நாடு முழுவதும் இந்த ஒரு வாரத்தில் ஒரு ஆயிரம் கார்டாவது வருமா? எங்கே பார்க்கலாம்.

குறிப்பு: ரிப்ளே (Reply) கார்டாக அனுப்பினால் அந்த ரிப்ளேயில் அங்கத்தினராக சேர்ந்த ரசீது அனுப்பப்படும்.

தலைமை நிலையம், திராவிடர் கழகம், ஈரோடு.

நிலையை சிறிதுகூட மாற்றக் கூடியதல்ல என்று "ஜோசியம்" கூறுவோம்.

முக்கிய வேண்டுகோள்

தோழர்களே! இம்மாதம் 17-ம் தேதி முதல் ஒரு வாரம் நமது பெரியார் பிறந்த நாளை தமிழ்நாட்டில் பல இடங்களில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரியவருகிறது. அக்கொண்டாட்டம் ஆழ்வார்கள், நாயன்மார்கள் திருநட்சத்திரம் போல் இல்லாமலும் இதுவரையிலும் நடந்து வந்த பெரியார் பாராட்டுக் கூட்டம் போல் இல்லாமலும் புதிய முறையில் நடைபெறவேண்டுமென்பது எங்களுடைய அவா. அதாவது, பெரியார் தலைமை வகித்து நடத்தும் 4½ கோடி மக்களின் பிரதிநிதி ஸ்தாபனமாகிய ஜஸ்டிஸ் கட்சி என்னும் திராவிட கழகத்திற்கு புத்துயிரையும், பெருமையையும், எதிரிகளுக்கு ஒரு வியப்பையும் தரத்தக்கதாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட காரியங்கள் செய்யப்படுவதுதான் பெரியார் பிறந்த நாளாய் இருக்கத் தகுதியுடைய நாளாகும்.

தோழர்களே!! நீங்கள் அப்படிச் செய்ய விரும்புகிறீர்களா? விரும்புவதானால் அடியிற்கண்டபடி செய்யுங்கள்.

17-ம் தேதியன்று அன்றுமாலை வரை திராவிடர் கழகத்திற்கு பல நூற்றுக்கணக்கான அங்கத்தினர்களைசேர்க்கவேண்டும். சேர்த்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையைகொண்டாட்டவிழாவில் வெளிப்படுத்த வேண்டும். வெளிபடுத்தி பத்திரிகைக்கு அனுப்பும் செய்தியுடன் அனுப்பவேண்டும். சேலம் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரிப்பது பற்றி தீர்மானம் செய்யப்பட வேண்டும். மேலும் ஒரு வாரம் வரை அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.

பிறந்த நாள் பரிசு என்று சிறிய சாமான்களோ, சிறிய தொகையோ வசூலிக்க வேண்டும். அவை தமிழ்நாட்டில் ஏராளமான அங்கத்தினர்கள்சேர்ப்பதற்கு பயன்படவேண்டும். இந்த மாதிரியான முறை இவ்வருடம் முதல் துவக்கப்பட வழிகாட்ட வேண்டி இருப்பதனால் அருள் கூர்ந்து ஒவ்வொரு தோழரும் முயற்சி செய்யவேண்டும். தலைமை ஸ்தாபனத்தில் இருந்து அதிகமான அங்கத்தினர்களை சேர்த்தவர்களுக்கு ஒரு வெள்ளி கோப்பை பரிசாக அளிக்கப்படும். இரண்டாவதாக அப்-

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கத்தினர்கள் சேர்த்தவர்களுக்கும் முறையே சிறு பரிசுகள் அளிக்கப்படும். பிறந்தநாள் பரிசுக்காக வஸ்துக்கள், துணிகள், தொகைகள் வசூல்செய்யப்பட்டால் அதிலும் முதல் இரண்டு மூன்றாவதற்கு பரிசுகள் வழங்கப்படும். தனிப்பட்ட முறையில் அதிகமான அங்கத்தினர்கள் சேர்த்தவர்களுக்கும் அதுபோலவே பரிசு அளிக்கப்படும்.

குறிப்பு:

அங்கத்தினர்கள் சேர்க்கும் முறை:

அங்கத்தினர்கள் ரசீதுகள் அச்சாகின்றன. அவை பின்னால் அனுப்பப்படும். அதற்கு முன் அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கு ஒரு பைண்டு நோட்டு புத்தகத்தின் முதல் பக்கத்தில் "ஜஸ்டிஸ்கட்சி என்னும் திராவிடர் கழகத்திற்கு அதன் கொள்கைகளையும், திட்டங்களையும், நடைமுறையில் சிறப்பாக 27-8-44ல் சேலத்தில் நடந்த தீர்மானங்களையும் ஒப்புக்கொண்டு அங்கத்தினராக சம்மதிக்கிறோம்" என்று எழுதி ஒவ்வொருவரிடமும் கையெழுத்தும் தெளிவான அவரது விலாசமும் குறிக்கப்பட வேண்டும். இப்படிச்செய்வதின் மூலம் பெரியார் பிறந்தநாள் கொண்டாடினால் நாம் பெரியாருக்கும் அவர் நடத்தும் கட்சிக்கும் உண்மை தொண்டாற்றியவராவோம்.

பொன்மலை திராவிட வாலிபர் கழகம்

மேற்படி கழக 4-வது ஆண்டு விழா 25-9-44-ந் தேதி மாலை 7 மணிக்கு பொன்மலையில் நடைபெறும். அது சமயம் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஜனார்த்தனம், பெரியார், முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஜி. பராங்குசம்,
காரியதரிசி.

திருவாரூரில் விறகுக் கஷ்டம்

திருவாரூரில் சாதாரண மக்கள் விறகு கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். சௌகரியம் இருப்பவர்களுக்கு வண்டி வண்டியாகவும் 5 ரூபாய்க்கும், 10 ரூபாய்க்கும் கிடைக்கிறது. சாதாரண மக்களுக்கு விறகுக்காக வாங்கப்பட்ட பணம், மூன்றாம் நாள் விறகு இல்லையென்று திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

ரோஜா முத்தையா (க-றி)
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இதுகாறும் பல ஊர்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் உறுப்பினராய்ச் சேர்ந்ததாகத் தெரிவித்துள்ளார்கள்—உங்கள் ஊர் செய்தி என்ன?

கோவை ஜில்லா திராவிடர் கழகம்

அறிக்கை

சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி அவசரமாகவும், அவசியமாகவும் செய்ய வேண்டிய முதல் வேலை திராவிடர் கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்ப்பதாகும். இதற்கான ரசீது புத்தகங்கள் அச்சடித்து தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன.

கோவை ஜில்லாவில் ஒவ்வொரு தாலூகாவிலுள்ள நமது தோழர்கள் தங்கள் சக்தி, பெரியார் வாரத்தில் எவ்வளவு அங்கத்தினர்கள் சேர்க்க முடியுமோ அவ்வளவு அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டுமென்றும், திராவிடர் கழகங்கள் உள்ள தாலூகாக்களில் ஷை கழக காரியதரிசிகள் உறுப்பினர்களை சேர்க்கத்தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம். ரசீது புத்தகங்களுக்கு "காரியதரிசி, கோவை ஜில்லா திராவிடர் கழகம் ஈரோடு" என்ற விலாசத்திற்கு எழுதவும்.

பி. பழனிச்சாமி,
எஸ். ஆர். சந்தானம்,
காரியதரிசிகள்.

குடந்தையில் பொதுக் கூட்டம்

கும்பகோணம்: இவ்வூர் தெ. இ. ந. உ. சங்க அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் நாகேசுவரன் வடக்கு வீதியிலுள்ள டாக்டர் டி. எம். நாயர் ஞாபகார்த்தக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

கே. கே. நீலமேகம்,
காரியதரிசி.

தெ. ஆ. மாவட்ட திராவிடர் மாநாடு

வரவு செலவு விவரம்

29-7-44ல் நடைபெற்ற ஷை மாநாட்டுக்கு மொத்தவரவு: ரூ. 1286-0-0
மொத்தச்செலவு ரூ. 959-4-4

கையிருப்பு ரூ. 326-11-8

இந்த இருப்பில் ரூ. 92 கடலூர் எ. சி. எஸ். சகோதரர்கள் வசமும், இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காலஞ்சென்ற எம். சி. ராஜாவுக்கு அனுதாபம்

சென்னை: திவான்பகதூர் எம். சி. ராஜாவின் மரணத்தைக் குறித்து அனுதாபம் தெரிவிக்க சென்னை ஷெரீப் ஏற்பாடு செய்த பொதுக்கூட்டமொன்று 4-9-44ல் விக்டோரியா பப்ளிக் ஹாலில் மேயர் டாக்டர் நியமதுல்லா தலைமையில் நடைபெற்றது.

"அருமையான பொதுஜன சேவை செய்த திவான்பகதூர் எம். சி. ராஜாவின் மரணத்தால் இம்மாகாணம் பெருத்த நஷ்டத்தை அடைந்து விட்டதாகச் சென்னை வாசிகளின் இக்கூட்டம் கருதுகிறது" என்ற தீர்மானத்தை குமாரராஜா சர். எம். ஏ. முத்தையா செட்டியார் பிரேரேபித்துப் பேசினார். ஜனாப் அப்துல் ஹமீத்கானும், திவான்பகதூர் எம். ராமனும் ஷை தீர்மானத்தை ஆதரித்தார்கள். இறந்தவரின் நினைவு மக்கள் மனதில் நிலைத்திருக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ராவ்பகதூர் என். சிவராஜ் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இவ்விரு தீர்மானங்களையும் அன்னாருடைய குடும்பத்தாருக்குத் தெரிவிப்பதென முடிவு செய்யப்பட்டதும், தோழர் என். ஜி. ரங்காராமானுஜம் அவர்களால் வந்தனோபசாரங்கூறக் கூட்டம் முடிவுற்றது.

பாவலன் வேண்டுகோள் திராவிடஸ்தான் டே (நாள்)

"திராவிடஸ்தான் டே" (நாள்) என்று ஒரு கொண்டாட்டம் நடத்தி அந்நாளில் நமது லட்சியத்தை மக்களுக்குத் தெரியப்படுத்திக் கிளர்ச்சிசெய்ய வேண்டியது நம் கடமை.

ஆனதால் பெரியார் அவர்களை திராவிடஸ்தான் நாளுக்காக ஓர் நாளைக் குறித்து வருடந்தோறும் கொண்டாடும்படி ஓர் அறிக்கை விடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாலசுந்தரம்.

சென்னை வேளாளர் சங்கம்

சென்னை: ஷை சங்கப் பொதுக்கூட்டம் 17-9-44ந் தேதி மாலை 5-30 மணிக்கு தோழர் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். பல தோழர்கள் 'இந்து சட்ட சீர்திருத்தமும் பொதுமக்களின் கருத்தும்' என்பதுபற்றி பேசுவார்கள்.

இறுதிச்சடங்கு

நாங்குனேரி: 9-9-44ந் தேதி இயற்கை எய்திய தோழர் பி. நம்பியா பிள்ளையவர்களின் இறுதிச் சடங்கு 24-9-44ல் நடைபெறும்.

மதிப்புரைகள்:

'தமிழ் மகள் தந்த செய்தி'

குடியேற்றம் தோழர் மு அண்ணல் தங்கோ அவர்களால் எழுதப்பட்ட "தமிழ் மகள் தந்த செய்தி அல்லது சிறையில் கண்கண்ட கனவு" என்ற நூல் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது ஒரு இனிய தமிழ்க் கவிதை தமிழ் மக்களிடம் தோன்றியுள்ள கிளர்ச்சி யூற்றை விளக்குகிறது. அரசியல், சமுதாய சீர்திருத்தம், பெண்கல்வி ஆகியவைகள் இந்நூலில் கவியின் வாயிலாக எழுதப்பட்டிருக்கிறது. தமிழர்கள் இந்நூலை வாங்கி ஆதரிப்பார்களாக.

விலை அணா 6.

கிடைக்குமிடம்: கோ. கிருஷ்ணசாமி, 133, லாங்கு பஜார், வேலூர்.

கால்ட்வெல் ஒப்பிலக்கணம்

சென்னை தோழர் செ. மீனாக்ஷி சுந்தரனார் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட "கால்ட்வெல் ஒப்பிலக்கணம்" என்ற நூலை வரப்பெற்றோம். திராவிட மொழி நூலாராய்ச்சிக்குக் கலங்கரை விளக்காக என்றென்றும் உள்ள நூல் பேராசிரியர் கால்ட்வெல் அவர்களின் ஒப்பிலக்கணமாகும். இந்நூலின் கருத்தை தோழர் மீனாக்ஷிசுந்தரனார் தமிழில் தந்துள்ளார். மொழிபெயர்ப்பு நன்றாய் இருக்கிறது. மொழிபெயர்ப்பு நூலாகவே தோன்றவில்லை. கல்லூரி மாணவர்களுக்கேயன்றி மொழி நூலாசிரியர்களுக்கும் வேறு மாணவர்கட்கும் இந்நூல் பேருதவியாயிருக்கும். ஆசிரியரின் பரந்த மொழி ஆராய்ச்சி இந்நூலின் பல பக்கங்களில் அடிக்குறிப்புகளாகக் காணப்படுகிறது. இன்னும் கொஞ்சம் எளிய நடையில் எழுதியிருக்கலாம்.

விலை அணா 10.

கிடைக்குமிடம்: தோழர் மீனாக்ஷி சுந்தரம், தமிழகம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

ஒரு மொழி

ஞானவள்ளல் பாஞ்சோதி மகான் என்பவரால் எழுதப்பட்ட மேற்படி நூல் ஒன்று நமது பார்வைக்கு வந்தது இஃது சாதாரண மக்களுக்கு அவசியமற்ற நூல் என்றே நாம் கருதுகிறோம்.

இதன் விலை அணா 4.

கிடைக்குமிடம்: மெய்யுணர்வாளர் கா. சின்னையா செட்டியார், நெ. 11, ஆயலூர் முத்தையா முதலி தெரு, ஜி. டி. சென்னை.

மாணவரே கேளீர்!

தோழர் டி. சி. என். மணி அவர்களால் எழுதப்பட்டு, திருச்சி 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின'ரால் வெளியிடப்பட்ட "மாணவரே கேளீர்!" என்ற சிறிய நூல் ஒன்று வரப்பெற்றோம். இந்நூல் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. மாணவர்களை தட்டியெழுப்பி தமிழுணர்ச்சியும் நாட்டுப்பற்றும் எழுப்பக் கூடியதாயிருக்கிறது. இத்தகைய நன் முயற்சியில் தொண்டாற்றிவரும் தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றத்தாரை நாம் பாராட்டுகிறோம்.

விலை அணா 1.

"புனித பூமி"

இஃது மாதமொருமுறை கோவையிலிருந்து வெளிவரும் வெளியீடு. இதன் பதிப்பாசிரியர் தோழர் எம் ஹனீப். முஸ்லிம்களை, கலை, மொழி, அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் விழிப்படையச் செய்யக்கூடிய பல கட்டுரைகள் இதில் மலிந்து கிடக்கின்றன. முஸ்லிம்கள் இதை மனமுவந்து வரவேற்று ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

தனிப் புத்தகம் விலை 4 அணா.

வருடம் ரூ. 3-12-0.

கிடைக்குமிடம்; கமாலியா பப்ளிஷிங் ஹவுஸ், ஹக்கீம் ரோடு, கோயமுத்தூர்.

தமிழ்நாட்டு முஸ்லிம்கள் யார்?

ஆத்தூர் (சேலம்) தோழர் மதனீ என்பவரால் எழுதப்பட்டுள்ள "தமிழ் நாட்டு முஸ்லிம்கள் யார்?" என்ற தலைப்போடு கூடிய துண்டு பிரசுரமொன்று வரப்பெற்றோம். முஸ்லிம்களும் திராவிடர் இனத்தவர் என்பதையும், முஸ்லிம்கள் திராவிடநாட்டுப் பிரிவினைப் போரில் ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தையும், முஸ்லிம்களின் கலை, மொழி, நாகரீகம் முதலியவை காப்பாற்றப்பட வேண்டுமானால் திராவிடஸ்தான் பெற்றால்தான் முடியும் என்பதையும் தோழர் மதனீ நன்கு விளக்கமாக தீட்டியுள்ளார். இவ்வாறு முஸ்லிம் இளைஞர்கள் பாடுபட—உண்மையை விளக்க முன்வருவார்களேயானால், முஸ்லிம்களுக்கு திராவிட நாடு பிரிவினைக் கிளர்ச்சியில் சோலாமா சேரலாமா என்ற சந்தேகம் நீங்கி ஒத்துழைக்க முன் வருவார்கள் என்பது நிச்சயம். எனவே தோழர் மதனியின் முயற்சியை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

நாடக நடிகர் மாநாடு

மேற்படி மாநாடு 17-9-44ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் நடைபெறும். ராவ்சாஹப் A. A. ஆறுமுக நாடார் தலைமைவகிப்பார். கலைச் சுவையரசு N. S. கிருஷ்ணன் மாநாட்டைத் திறந்துவைப்பார். நாடக இசைஞானி M. K. தியாகராஜ பாகவதர் தமிழ்க்கொடியேற்றுவிப்பார். நாடகமணி M. S. தாமோதரராவ் கலைக்கொடியேற்றுவிப்பார்.

பிறப்பு

அருப்புக்கோட்டை: 10-10-43 ல் மதுரை தெ இ. ந. உ. சங்கத்தில் திராவிடர் தொண்டர் படையின் ஆதரவில் வீரவாளிவாகம் செய்துகொண்ட அருப்புக்கோட்டை சண்முகவேலுவின் துணைவி, லட்சுமியம்மாள் 3-9-44ல் ஆண்மகவைப் பெற்றதைக் குறித்து 'குடிஅரசுக்கு' ரூ. 2ம், திராவிடநாட்டுக்கு 1ம் நன்கொடை அளித்துள்ளார்கள்.

"தமிழ்நாட்டு முஸ்லிம் எழுத்தாளர்கள்"

ஆசிரியர்: தோழர் "பாஷா"

விலை அணா 6.

கிடைக்குமிடம்: மானேஜர், "அஜிலன்ஸ்" பதிப்பகம், ஆத்தூர், (சேலம்)

இந்நூல் தமிழ்நாட்டு முஸ்லிம் எழுத்தாளர்கள் வரலாற்றை அதாவது சுமார் 17 பேர்களுடைய சரிதையை சுருக்கமாக எடுத்துக்கூறி அறிமுகப்படுத்தி வைக்கிறது. தமிழ் நாட்டு முஸ்லிம் எழுத்தாளர்களின் சரிதையை உணர ஆசைப்படுகிறவர்களுக்கு இது ஒரு சிறந்த நூலாகும்.

பெரியார் தினத்தில்!

அவர்செய்த தொண்டுகளை உணரவும், பிறர்க்கு உணர்த்தவும் வேண்டாமா?

அப்படியானால்,

பெரியார் பெருந்தொண்டு

என்னும் நூலை வாங்கி வாசியுங்கள்!

உங்கள் நண்பர்க்கும் பரிசாக வழங்குங்கள்!

விலை அணா 8.

9 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புத்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்

கிடைக்குமிடம்:

பூங்கொடிப் பதிப்பகம்,
43, சென்ட்தெரேஸ் வீதி, புதுச்சேரி.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(12ம் பக்கத் தொடர்ச்சி)

அதில் அறிவுடைமையோ மானமோ இருக்க முடியுமா? ஊரார் நம்மை முட்டாள்கள், அறிவில்லாதவர்கள், மானமற்றவர்கள் என்று பரிகசிக்கமாட்டார்களா?

தங்களை திராவிடர்கள் அல்லாதவர்கள் என்று கருதுபவர்கள் யோக்கியர்களாக இருந்திருந்தால் 4-வருடங்களுக்கு முன்னமேயே விலகி இருக்க வேண்டும். இன்று வந்து பேசுவதில் ஏதாவது உண்மை இருக்க முடியுமா? இது விஷயமாக 4 வருஷமாக நாம் செய்யும் முயற்சியையும் பத்திரிகைகளில் மாநாடுகளில் காணப்பட்ட தன்மைகளையும் நன்றாய் தெரிந்தும் ஒத்துக்கொடுத்தும் மாநாடுகளுக்குத் தலைமைகள் வகித்தும் இருந்துவிட்டு இன்று குறை கூறுவது நேர்மையான யோக்கியப்பொறுப்பான காரியமா என்று கேட்கிறேன்.

அன்றியும் சமுதாய மத சம்பந்தமான தீர்மானங்கள் செய்து விட்டோம் என்றும் அதனால் கட்சி கெட்டுப் போய் விட்டதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். அப்படி சேலம் மாநாட்டில் என்ன செய்து விட்டோம்.

நாம் இந்துக்கள் அல்ல என்று மத சம்மந்தமான தீர்மானம் செய்தது சேலத்தில் அல்ல. அது 1940ல் திருவாரூர் மாநாட்டில், அதை வலியுறுத்திப் பேச ஆரம்பித்தது 1937ல் இந்தி எதிர்ப்பின் போதும் 1938ல் 50 ஆயிரம் மக்களுக்கு முன் படிக்கப்பட்ட எனது சென்னை மாநாட்டு தலைமை உரையிலும் ஆகும். என் தலைமை உரைக்கு முன்னதாகவே காலம் சென்ற பன்னீர்ச்செல்வம் பேசி இருக்கிறார். அதுமாத்திரமல்ல 1917ல் "ஜஸ்டிஸ்" கட்சி ஆரம்பித்த போது அன்றைய தலைவர்கள் நாம் திராவிடர் என்பதைக் கருதி கட்சிப் பத்திரிகைக்கு "திராவிடன்" என்ற பெயர் இட்டிருக்கிறார்கள்.

ஆகவே மதம் வகுப்பு விஷயத்தில் சேலம் மாநாட்டில் புதிதாக ஒன்றும் செய்துவிடவில்லை. தவிர சமுதாய சம்மந்தமாய் ஜாதி உயர்வு தாழ்வு பேதம் நீக்கும் விஷயமாகவும் "ஜஸ்டிஸ் கட்சி" ஏற்படுத்தப்பட்ட காலத்திலேயே நம்நாட்டிலுள்ள "எல்லா ஜாதிகளையும் அழித்து ஒரு ஜாதியாக ஆக்கவேண்டுமென்பது நமது கொள்கை" என்று விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதை அனுசரித்து தான் திருவாரூர் மாநாட்டில் "ஜாதி பேதம் உயர்வுதாழ்வு ஆகியவைகளை ஒழித்தும் அவைகளை ஆதரிக்கும் ஆரியவேத புராண சாஸ்திர இதிகாசங்களையும் நமக்கு சம்மந்தப்படாமல் இருக்கும்படியும் செய்யவேண்டுமென்று வலியுறுத்தியும்" இருக்கிறது. இதற்கு அப்புறம் இதை தப்பு என்று யாராவது சொல்வார்களானால் அவர்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் நாணயமான சம்மந்தமிருக்க முடியுமா என்று கேட்கிறேன்.

கௌரவ பட்டம் பதவிகள் விடுவதில் யாருக்காவது ஆட்சேபனை இருந்தால் நாளைக்கும் அதை கனிவோடு, மரியாதையோடு கேட்கத் தயாராய் இருக்கிறேன். இந்த 6, 7 வருஷகாலமாய் இந்தப் பட்டம் பதவியாளர்கள் இந்த கட்சிக்கு செய்த காரியம் என்ன? சொல்லட்டும். அவர்கள் செய்யப்போவதென்ன? இக்கட்சிபற்றி அவர்களுடைய திட்டம் என்ன? அவர்களுக்கு பொதுமக்களிடம் இருக்கும் சம்மந்தம், மரியாதை என்ன? எத்தனை பேர் பொதுமக்களிடம் சென்று பொதுக்கூட்டங்களில் வந்து பேசி இருப்பார்கள். பக்கம் கும்பல் கும்பலாக ஜெயிலுக்கு போன காலத்தில் போகவேண்டி இருக்கிற காலத்தில் இவர்கள் நடந்துகொண்ட மாதிரி என்ன? அல்லது கட்சியின் எந்தக் காரியத்திற்காவது எந்த திட்டத்திற்காவது இவர்கள் செலவழித்த காசு எத்தனை? இது முதலான காரியங்களுக்கு இவர்கள் எத்தனை பேர் டைரி-நோட் குறிப்புக் கொடுக்க முடியும். அல்லது இந்த பட்டதாரிகளில் பதவிக் கருத்துக்காரர்களில் இரண்டு பேர் ஒருவருக்கொருவர் நண்பர்களாக யாராவது இருக்கிறார்களா? அல்லது இவர்களுக்குப் பதவி வந்தபோது யாராவது கட்சியையோ தலைவரையோ கலந்து கேட்டு ஒப்புக் கொண்டவர்கள் உண்டா? எதற்கு ஆக பொதுமக்களோ கட்சித் தொண்டர்களோ நாமோ இவர்கள் பட்டம் பதவியை மரியாதை செய்யவேண்டும்? நான் இப்படிச் சொல்லுவதற்கு ஆக யாரும் வருத்தப்படக்கூடாது என்று வேண்டிக்கொள்கிறேன்.

என்னை நாணயமில்லாமல் யோக்கியப் பொறுப்பு இல்லாமல் இழி மகன்போல் ஒரு பத்திரிகைக்காரன் வைதால், இந்தப்பட்டம் பதவிக்காரர்களுக்கு யோக்கியப் பொறுப்பு இருந்தால் என்ன செய்திருக்கவேண்டும். அவனுக்கு ஆயிரக்கணக்கில் பணம் கொடுப்பதா? அவனுக்கு விருந்து வைப்பதா? வரவேற்பு அளிப்பதா? ஆகவே நம் கட்சியில் உள்ள பெரியவர்களின் எனக்கு நண்பர்கள் போல் காட்டிக்கொண்டவர்களின் யோக்கியதையும் நாணயமும் என்ன என்பதை இதிலிருந்து யோசித்துப்பாருங்கள்.

நான் ஒரு ஆளுக்கு கொடுத்து வந்த உதவிப் பணத்தை ஒரு சர். இராமசாமி முதலியாரையும் ஒரு சர். ஷண்முகத்தையும் வைததற்கு ஆக நான் நிறுத்திக்கொண்டேன், அதனால் ஆத்திரப்பட்டு அதற்கு ஆக என் தலைமைப் பதவியை வைய அந்த ஆள் ஆரம்பித்தால் நம் கட்சி பெரிய மனிதர்களுக்குத் தலைவரிடத்தில் பற்று இருக்குமானால் வைபவனுக்குப் பணம் கொடுத்து உற்சாகப்படுத்தி இருப்பார்களா?

ஆகவே இவர்களது பட்டம் பதவி, பணம், கட்சிப்பற்று எதற்கு உதவிற்று என்று யோசித்துப் பாருங்கள். இப்படியே இந்த ஜஸ்டிஸ் கட்சி இந்தப்படியான பட்டம் பதவிப் பெரியவர் பலர்களாலும் கட்சியின் பேரால் வாழ்வு நடத்தும் சிலர்களாலும் பாழ்படுத்தப்பட்டுச் சிரிப்புக்கு இடமாக்கப்பட்டு சீரழிந்து வந்திருக்கிறது.

நாளைக்கும் புதுக்கட்சியாளர்கள் யோக்கியதை தெரியவேண்டுமானால் பணம் கொடுத்தால் புகழ்வதும் கொடுக்காவிட்டால் வைவதுமான ஆட்கள் முயற்சியால், அப்படிப்பட்ட ஆள்களின் சிநேகத்தால் கூட்டுறவால்தான் முயற்சியால்தான் நடத்தப்படப் போகிறது என்று "ஜோசியம்" கூறுவேன். பட்டம் விடும் பேச்சும், உத்தியோகம் ஏற்காத பேச்சும் சேலத்தில் பேசாதிருந்தால் இன்று அதிக்கைவிடும் கைகளில் முக்கால் வாசிப் பேர் வாய் மூடிக்கொண்டுதான் இருந்திருப்பார்கள்.

உத்தியோகம் பதவி பட்டம் பற்றிக் கவலையில்லாமல் கட்சிக்குப் பாடுபடுபவர்கள் எத்தனை பேர்? அப்படிப்பட்டவர்களுக்கு எதிரிகள் எத்தனை பேர் என்பது சீக்கிரம் விளங்கப்போகிறது.

மதம், அரசியல், சமுதாய இயல், பொருளியல், இலக்கிய இயல் எல்லாம் ஒரு வகுப்புக் கட்சிக்கும் இனக்கட்சிக்கும் கவனிக்கப்படத்தக்கதே ஒழிய அலட்சியப் படுத்தக்கதோ வேண்டாததோ அல்ல. ஆதலால் சேலம் மாநாட்டில் கூடாததோ நல்லவர்கள் விலகி ஓடவேண்டியதோ ஆன தீர்மானங்கள் ஒன்றும் நடந்துவிடவில்லை.

(முடியவில்லை)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இவை இப்போது முக்கிய விஷயமல்ல. நம் கட்சியில் இருக்கும் மக்களின் யோக்கியதையையும் அவர்களின் சாவகாசத்தையும் பற்றிச் சொன்னேன். நீங்களாவது வரவேற்புக் கொடுத்தீர்கள் அவர். என்னை வைது எழுதுவதைப் படித்து பார்த்து சிரித்துவிட்டு 100, 200, 1000 என்று ரூபாய் உதவி, அவரை உற்சாகப் படுத்துகிறவர்கள் வெகு பேர் நம்ம கட்சியில் பிரபல பெரிய மனிதராகவும் கட்சித் தலைவராக இருக்க சிலரால் ஆசைப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலால் இதற்கெல்லாம் ஒழுங்கு நடவடிக்கை என்றால் வெகு பேர் மிஞ்ச முடியாது என்பதற்கு ஆகச்சொல்ல வந்தேன் என்றேன். பிறகு சேர்மன் ரத்தினசாமி அவர்கள் நாளை வரவேற்புக் கமிட்டி கூட்டி மகாநாட்டின் மற்ற காரியம் பார்க்கிறோம். மாநாடு 20ந் தேதி நடத்திவிடலாம் என்று ஒப்புக்கொண்டு எழுந்திருக்கும் போது மாநாடு திறக்கவும் கொடி உயர்த்தவும் யாரைப் போடலாம் என்றார்கள். அதெல்லாம் உங்கள் இஷ்டம் என்று சொல்லி எழுந்தேன், அவர்களும் எழுந்து போய் விட்டார்கள்.

2 நாள் பொறுத்து ஈ. வெ. ரா. தலைமையென்றும், கொடி உயர்த்தவும், மாநாடு திறக்கவும் தோழர்கள் அண்ணாதுரை, கிருஷ்ணசாமி, குமாரராஜா, இராமச்சந்திர ரெட்டியார் ஆகியவர்கள் கேட்கப்பட்டிருப்பதாகவும் பத்திரிகையில் போட விளம்பர அதிகாரியால் தந்தி வந்தது. பிறகு 2 நாள் பொறுத்து கொடியேற்றவும் மாநாடு திறக்கவும் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், விஸ்வநாதம் ஆகியவர்கள் பெயர் வந்தது. சேர்மனுக்கும் செட்டியாருக்கும் அத்யந்த நண்பர்கள் பத்திரிகையில் கொடியேற்றவும் மாநாடு திறக்கவும் கேட்டுக் கொண்டவர்கள் பெயர் தவிர, தலைவர் பெயர் இல்லாமல் விளம்பரம் வந்தது. இதற்குள்ளாகத் தலைமை வகிக்க ஸர். ஷண்முகத்திற்கு அவசர வேண்டுகோள் சென்றிருப்பதாகவும் அவர் காலத்தில் வந்து சேராவிட்டால் தோழர் பாண்டியனைத் தலைமை வகிக்கும்படி கேட்கக் கொள்ள பட்டி வீரன்பட்டிக்கு திறப்பாளர், கொடியேற்றுவோர் முதலிய ½ டஜன் பேர்கள் போயிருப்பதாகவும் அதனாலேயே தலைவர் பேர் போடவில்லை என்றும் சேலத்தில் இருந்து மாநாட்டுக்காரியப்பொறுப்பாளர் வேறு சிலரிடம் இருந்து தகவல் வந்தது. நான் ஒன்றுக்கும் பதில் எழுதவில்லை. கடைசியாக சேலம் வரவேற்புக்கழக அங்கத்தினர் சிலரும் மாநாடு நடத்த செலவுக்கு பணத்திற்கு பொறுப்பு ஒப்புக்கொண்டவர்களும் ஈரோட்டிற்கு வந்து "மாநாட்டு நடைமுறை ஒழுங்காக இல்லை, கலகத்துக்குத் தயார் செய்கிறார்கள், மாநாட்டைத் திறந்து விட்டுமா? அல்லது நாங்கள் என்ன செய்வது" என்று கேட்டார்கள். நான் "உங்களுக்கு அதைப்பற்றிக் கவலை வேண்டாம், எல்லாவற்றையும் இயற்கைக்கு விட்டு விடுங்கள். அவர்கள் இஷ்டப்படி நடத்திக்கொள்ளட்டும், எப்படியாவது மாநாடு நடக்கவேண்டும். நீங்கள் ஒப்புக்கொண்டது போல் பணம் கொடுத்து விடுங்கள் என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டேன். இதற்கு பிறகு என்ன காரணத்தாலோ அட்வர்டைஸ்மெண்டுக்கு (விளம்பரத்திற்கு) மாத்திரம் ரூ. 500 போல் செலவழித்து தோழர்கள் பாலசுப்பிரமணியம் விஸ்வநாதம் பெயர்களையும் விளம்பரம் செய்ய என் பெயரையும் சேர்த்து எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்தார்கள்.

மத்தியில் எங்கெல்லாமோ ஆள்கள் சென்று யாரையெல்லாமோ தலைமை வகிக்க கேட்டுக்கொண்டதாகவும் அவர்கள் பெரிதும் மறுத்துவிட்டதாகவும் செய்திகள் மாநாட்டுக் காரியப் பொறுப்பாளிகளால் தெரியவந்ததுடன் எனக்கும் மாநாட்டுக்கு முதல்நாள் 26ந் தேதி மாலை 4-மணிவரையில் என்னை தெரிந்தெடுத்த செய்தியோ என்னை சம்மதம் கேட்கும் மரியாதைக் கடிதமோ வேறு வித தகவலோ ஒன்றும் மாநாட்டு காரிய தரிசிகளாலோ வரவேற்புத்தலைவராலோ வரவே இல்லை. கடைசியாக மாநாட்டுக்கு கட்சித்தலைவன் என்கின்ற முறையிலாவது போகலாமா? (பலரால்) சிரிப்புக்கு இடமில்லாமல், காரியம் நடத்தப்படுமோ அல்லது கலவரங்கள் ஏதாவது நடக்குமோ என்றெல்லாம் தோன்றிவிட்டது. பின் 26ந் தேதி மாலை "கடிதங்களுக்குப் பதில் இல்லை எப்பொழுது வருகிறீர்கள்" என்று தந்தி வந்தது. இந்த தந்தியிலாவது மாநாட்டுக்கு என்னை தலைமை வகிக்க அழைப்போ தெரிந்தெடுத்த தகவலோ இல்லை, என்றாலும் நான் "நாளை காலை பாசஞ்சரில் வருகிறேன்" என்று தந்தி பேசிவிட்டேன்.

இவைகள் மாநாட்டுக்கு முன்னால நடந்த நடவடிக்கைகளாகும்.

மாநாட்டுக்கு நான் சென்றவுடனும் ஊர்வலம் குறிப்பிட்ட இடத்தில் இருந்து நடத்தாமல் "தோழர்கள் பாண்டியன், பாலசுப்பிரமணியம், விஸ்வநாதம் ஆகியவர்கள் இருந்த இடத்திலிருந்து நடத்தப்பட்டது" என்று ச. அ. பத்திரிகை அதை தலைவருக்கு ஒரு சேவையாக குறிப்பிட்டிருக்கிறபடியால் ஊர்வலத்தின்போது கூட மாநாட்டு தலைவர் விஷயத்தில் வரவேற்புக்கழகத்தாருக்கு மாநாட்டின் வேறு தலைவரை இருத்துவது என்ற எண்ணம் இருந்ததாக ஜாடை காட்டப்படுகிறது.

எப்படி இருந்தாலும் மாநாட்டின் கலகம் நடக்கும் என்பது மாத்திரம் சேலத்து மகாஜனங்களின் மாநாட்டுடன் சம்பந்தப்பட்ட பெரும்பாலோர் கருத்தாக இருந்ததுடன் வரவேற்புக் கழகமும் இரண்டு கட்சியாகவே பிரிந்து அதாவது நம்மை வெறுத்து குறைவுபடுத்துகிற கூட்டமும் நம்மை ஆதரித்து பெருமைப்படுத்துகிற கூட்டமும் தனித்தனியாக பிரிந்து காரியம் செய்து வந்திருக்கின்றன. இதற்கு பல எடுத்துக்காட்டுகளும் பல பிரஸ்தாபங்களும் போதுமானது.

மாநாடு துவக்கப்பட்டவுடன் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உள்நாட்டுப்பெரும்பான்மையான மக்கள் ஆகியவர்களின் உணர்ச்சியும் விருப்பமும் இன்னவிதம் என்று தெரிந்தபின்னரே அவர்களது உத்தேச நிலையில் சிறிது மாற்றம் ஏற்பட்டு மாநாட்டில் கலவரம் கூடாது என்று விரும்புவதாகவும் தோழர்கள் பாலசுப்பிரமணியத்தையும் விஸ்வநாதத்தையும் கட்சியில் கொண்டுவந்து சேர்த்து தலைவருடன் ஒத்துழைக்க செய்வதற்குஆகவே அவர்களை மாநாட்டுக்கு அழைத்து இருப்பதாகவும்வேறு பல வார்த்தைகளும் சொல்லி மாநாட்டுப் பிரதிநிதிகளையும் கட்சியாளர்களையும் வருந்திக் கேட்டுக் கொள்ளப்பட வேண்டியவர்களானார்கள்.

இவ்வளவு நடந்த பின்னும் மாநாட்டில் ஊர்வலத்தில்; மற்ற காரியங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப் படுவதில் எப்படி நடந்துகொண்டேன் என்றால் மக்களை சமாதானப்படுத்தி அவர்களை வேண்டிக்கொண்டு வரவேற்புக்கழகத்தாருடைய ஆசையைப் பூர்த்திசெய்வதில் கவலைகொண்டு அதற்கு ஏற்ற வண்ணம் நடந்துகொண்டேனே தவிர வேறில்லை.

மாநாடு துவக்கமாயிற்று. வரவேற்புத் தலைவர் காரியதரிசி ஆகியவர்கள்கொடியேற்றவும் திறக்கவும் ஆன தோழர்களை அழைத்ததற்கு சமாதானம் சொல்லிக் கேட்டுக்கொண்டவுடன் நானும் அதை முழுமனதுடன் ஆதரித்து யாதொரு குறையும் குற்றமும் கூறாமல் நடக்க முயற்சித்தேன் என்பதோடு அவர்களும் யாவரும் அந்த சமயத்தில் மாத்திரம் சமாளித்துக் கொள்ள வெகு தந்திரமாய் நடந்து கொண்டார்கள் என்பதற்கு ஒப்பனையைப்பற்றி லெனின், மார்க்ஸ், பாரம்பரைத் தலைவர், பிறவித்தலைவர், வீரன், சர்வாதிகாரியாய் இருக்க வேண்டியவர் என்றெல்லாம் கவிராயர்கள் போல் புகழ்ந்து கூறி எழுந்து நின்று மாலையிட்டு கும்பிடுதல் முதலிய தந்திரமான காரியங்கள் செய்தார்கள். அவர்கள் காரியம் முடிந்தவுடன் ஒத்துழையாமை, எதிர்ப்பு, பொய்யும் புளுகும் சொல்லி வைதல்; குறைகூறுதல் முதலிய பல காரியங்கள் செய்வதில் சிறிதும் கூச்சப்படாமல் வெகு துணிவாய் பல காரியம் செய்தார்கள். இதுவே மாநாட்டின் வரவேற்புக்கழகத்தினுடையவும் தோழர் பாலசுப்பிரமணியத் [illegible]

னியாருடையவும் காரியம் ஆகும்.

இப்படிப்பட்ட பலநடவடிக்கைகளும், மாநாட்டுத் தீர்மானங்களும், கட்சியின் பேரால் இனி நடக்க இருக்கும் காரியங்களும் இதுவரையில் கட்சியில் இருந்த சிலர் கட்சியை விட்டு விலகித்தீரவேண்டிய நிலையை உண்டாக்கி விட்டது என்பதில் அய்யமில்லை. அவர்கள் நிலையைப் பார்க்கிற போது அவர்கள் விலகிநிற்க எண்ணுவது அவர்கள் நிலைக்கு அவசியமான சரியான காரியமே ஆகும். ஆனால் அதற்கு அவர்களால் ஆகச்செய்யப்படும் காரியம்தான் தந்திரமானதாக நாணயக்குறைவானதாக இருக்கிறது என்று சொல்லுவேன்.

பட்டம் பதவிகளை விடுவதும் சிறை செல்ல தயாராய் இருப்பதும், ஜாதிப் பட்டம் ஜாதிக்குறி கோவில் குளம் ஆர்ப்பாட்டங்கள் முதலியவைகளை விடுவதும் என்றால் யாருக்குத்தான் சவுகரியமாக இருக்க முடியும். அதிலும் சர்க்கார் தயவால் வாழுகிறோம், சர்க்கார் தயவால்தான் வாழ முடியும், பொதுமக்களுடன் கலந்திருக்க சம்மதால் முடியாது என்று கருதி இருப்பவர்கள் நம்மை விட்டு விலகித்தான் தீருவார்கள். தொண்டர்களிலும்—கட்சிக்காக வேலை செய்பவர்களிலும் கட்சிக்காகப் பாடுபடுவதின் மூலம் நல்ல வாழ்க்கை நடத்துகிறவர்கள் கட்சிக்காக ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான் கட்சி தொண்டர்களுடையவும் காரியக்காரர்களுடையவும் கடமை என்கிற நிலை வரும் போது பிரிந்து போய் விடவேண்டியவர்களாக ஆகிவிடுவார்கள் என்பதும் அதிசயமாகி விடாது. ஆனால் கட்சிக்காக சிறை செல்லுபவர்களுக்கும் பலன் எதிர்பார்க்காதவர்களுக்கும் தங்கள் நலத்தை விட்டுக் கொடுப்பவர்களுக்கும் கட்சி ஒன்று இருந்துதான் ஆகவேண்டும் என்கின்ற கவலை இல்லாவிட்டாலும் நம் காரியங்கள் பாழ்படும் வண்ணம் சுயநலமிகளும் சமய சஞ்சீவிகளும் நமக்கு ஆகவும் பிரதிநிதித்துவமாய் இருக்கும் கட்சியைப் பயன் படுத்திக்கொள்ள விடக்கூடாது என்பதற்கு ஆகவே கட்சியைப்பற்றி பிரமாதமாகப் பேசுகிறேன். ஆதலால் சேலம் மாநாட்டின் பலனாய் நானும் மற்றும் இத்தீர்மானங்களை நிறைவேற்றிய பதினாயிரக் கணக்கான மக்கள் தள்ளப்பட்டுப்போய் விட்டோமா அல்லது அவர்கள் 10, 15-பேர்கள் தள்ளப்படவேண்டியவர்களா அல்லது இருக்கத் தாக்குப் பிடிக்க முடியாதவர்களாக அவர்கள் ஓடிப்போய் விட்டார்களா? அல்லது என்னால் இனி இருக்கமுடியாதா என்பனவாகிய விஷயங்கள் பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம் அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

//நான் பெரிய பணக்காரனல்ல, வைப்பு வண்டிக்கணக்கிட்டு பணம் கொடுத்து சரி பண்ணிக் கொள்ளவோ, கூலி கொடுத்து என்னைப்பற்றி பெரிய பிரசாரம் செய்து கொள்ளவோ என்னால் ஒருநாளும் முடியாது. அந்தக்காரியத்தின் மூலமாக எனக்கு ஆகவேண்டியது கடுகளவுகூட கிடையாது. வீட்டு வாழ்க்கைக்கும் ஜெயில் வாழ்க்கைக்கும் எனக்கு வித்தியாசம் கிடையாது. இந்த பாழும் கட்சித் தலைமை இல்லாவிட்டால் இந்த ஆறு வருஷகாலத்தில் 2-தடவையாவது நான் ஜெயிலுக்குப் போகாமல் இருந்திருக்கவே மாட்டேன். இப்போதும் ஜெயிலுக்கு போகவேண்டும் என்பதற்கு ஆகவே சேலம் மாநாட்டுத்தீர்மானங்களில் சிலவற்றை வகுத்திருக்கிறேன். ஜெயில் பயமுள்ளவர்கள் எல்லோரும் இனி ஓடித்தான் ஆகவேண்டும். ஜயிலுக்குப் பயந்த கோழைகளுக்கும் காசாசை, உத்தியோக ஆசை, பட்டம் பதவி ஆசை பிடித்த சுயநல சமயசஞ்சீவிகளுக்கும் நாங்கள் படிக்கட்டல்ல, கையாளுகள் அல்ல, அப்படிப்பட்டவர்கள் விலக வேண்டும், முடியாவிட்டால் நாங்கள் வெளியேறி அவர்கள் வண்டவாளத்தை வெளிப்படுத்த வேண்டும்.

நம் கஷ்டம் என்னவா? தொல்லை எவ்வளவு? எத்தனை கோடிமக்களின் நலத்துக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறோம்? எவ்வளவு கஷ்டமானகாரியத்தை சாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்? இப்படிப்பட்ட நிலையில் உள்ள நாம் சில சமய சஞ்சீவிகளுக்கு ஆட்பட்டு; நாட்டு நலனையும் மக்கள் நலனையும் பாழாக்குவதா என்று யோசித்துப் பாருங்கள். அயோக்கியத்தனமான காலித்தனம் செய்ய என்னால்முடியாது. சொன்னதைப் புரட்டவும் உண்மைக்கு மாறாக நடிக்கவும் சமயம்போல் வேஷம் போடவும் என்னால் ஆகாது. என் வேலையும் சக்கரை பூசினதாக இருக்காது, ஆனால் நினைத்ததைச் சாதிப்பதில் உயிரைக்கொடுக்கும் துணிவு எனக்குஉண்டு. அப்படிப்பட்டவர்கள் என்னிடம் குற்றம் சிலதாவது உண்டு. அவர்களைக் கொண்டு என் வேலையை நான் பார்த்துக்கொள்ள முடியும். நான் தோற்றால் எனக்கு ஒன்றும் முழுகிப் போய் விடாது.

என் லட்சியமென்ன? ராவ்சாயபு ராவ்பகதூர், திவான்பகதூர், சர், ராஜா, பரம்பரை ராஜா? பட்டங்களா? பப்ளிக் பிராசிகூட்டர், ஜட்ஜி, கமிஷனர், மந்திரி, வைசிராய் சபை மெம்பர் முதலிய உத்தியோகங்களா? அல்லது என் பிள்ளைகுட்டிகளுக்கு பதவி, உத்தியோகமா? அல்லது வியாபாரத்தில், கண்ட்ராக்டில் சம்பாதித்து மூட்டை கட்ட வேண்டியதா? அல்லது கவர்னர் வைசிராய்களோடு கை குலுக்கி உத்தியோகம் பதவி பட்டம் வாங்கித் தருவதாய் பாசாங்கு செய்து ஏஜெண்டுகள் வைத்து ஆள் பிடித்து பணம் பெருமை சம்பாதிப்பதா? இவையெல்லாம் சுயநல மக்கள் இழி மக்கள் செயல், ஆசை என்று கருதி இன்றைக்கு 25வருஷம் ஆகிவிட்டது. இவை ஒருசிறிதும் சம்பந்தமில்லாததுதான் உண்மையான தொண்டு என்பது எனது முடிவு. மற்றவை எதுவும் வியாபாரமே யாகும். ஆதலால் எனது தொண்டும் என் நண்பர்கள் தொண்டும் வியாபாரப் பொது நலத்தொண்டல்ல. அன்றியும் நான் மாற்றமடைந்து விட்டால் வருந்துவதற்கு நான் கை முதல் ஒன்றும் பிரமாதமாகப் போடவில்லை, ஒரு முடியை (மயிரை)க் கொண்டு ஒரு மலையை இழுப்பது போல் ஒரு சாதாரண மனிதனாகிய நான் மலை போன்ற பெரிய காரியங்களைச் சாதிக்க இளைஞர்களின் ஆர்வத்தை வைத்துக் கொண்டு பெரிய முயற்சி செய்கிறேன். வந்தால் மலை வந்தது போல் வெற்றி வரட்டும். இல்லாவிட்டால் முடி அறுந்தது போல் போகட்டும். எனக்கு இந்தக் காரியங்கள் ஒரு வைத்தியமாக ஆகிவிட்டன. இனி இதிலிருந்து மாறவோ வேறு காரியம் பார்க்கவோ என்னால் முடியக் கூடியதல்ல. //

இன்று கட்சிப் பெயர் மாற்றத்தால் இந்த வீரர்களுக்கு வந்து விட்ட கஷ்டமென்ன? தென் இந்தியர் என்பது திராவிடர் என்று ஆய் விட்டால் என்ன குடிமுழுகிப்போய்விடும்?

நம்மை திராவிடர் என்று சொல்லிக் கொள்வதில் இவர்களுக்கு ஆட்சேபனை இல்லையாம். அந்தப்படி இதற்கு முன்னைய மாநாட்டில் 4-வருஷத்துக்கு முன்னதாகவே தீர்மானமாகிவிட்டது. இந்த தோழர் இராமச்சந்திர ரெட்டியாரும் சென்னை வீரர்களும் இருக்கவே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. திராவிடநாடு தனி நாடாகப் பிரியவேண்டும் என்பதிலும் இந்த வீரர்களுக்கு ஆட்சேபனை இல்லையாம், அதுவும் இந்த 4-வருடத்துக்கு முன்னதாகவே தோழர் இராமச்சந்திரரெட்டியார் இருக்கும் போதே தீர்மானமாகி திராவிடநாடு மூவத்திக் கமிட்டியில் அவரும் ஒரு மெம்பராக இந்த 4-வருஷமாக இருக்கிறார். ஆகவே நாம் இந்தியர் அல்ல, திராவிடர்கள், நமக்கு இந்திய அரசாங்க சம்மந்தமில்லாத திராவிடநாடு வேண்டும், என்று இருக்கும்போது நம் ஸ்தாபனத்துக்கு திராவிட கழகம் என்ற, பெயர் இருந்தால் நமக்கு என்ன கெடுதி என்று கேட்கிறேன். அன்றியும் நாம் இந்தியரல்ல என்று சொல்லிவிட்டு நம் ஸ்தாபனத்தை இந்தியர் சங்கம் என்று வைத்துக்கொள்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by [illegible] at the Tamil Nadu Press, 93, [illegible] Street, Erode.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை